தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௫	திருவள்ளுவர் யாண்டு உ௰௨ விரோதிகிருது, கார்த்திகை (1971 — நவம்பர் — திசம்பர்)	மலர் அ

(சென்ற இதழின் தொடர்ச்சி)

தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்

திரு. சா. குருமூர்த்தி, எம். ஏ., எம். லிட்.,

டிப்ளமா மானிடவியல்.

தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

அகழ்வாராய்ச்சி காட்டும் தமிழர் பண்பாடும் வாழ்க்கை முறையும் கி. மு. 1000 முதல் கி. பி. 500 வரை :

புதிய கற்காலத்திற்குப் பிறகு, கி. மு. 1000 முதல் கி. பி 500 வரை தமிழகத்தில் வாழ்ந்த மக்களுடைய பண்பாடு 'மெகலிதியப்' பண்பாடு எனப்படும் என்பதை முன்னரே கூறியுள்ளோம். இம்மக்கள் திராவிடர்களேயாவர். சங்க இலக்கியங்கள் காட்டும் தமிழர் வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் அனைத்தையும் கொண்டதுதான் இம் 'மெகலிதியப்' பண்பாடாகும். எனவே அகழ்வாராய்ச்சி காட்டும் மெகலிதியப் பண்பாடும், இலக்கியங்கள் காட்டும் தமிழர் பண்பாடும் ஒன்றேயெனக் கொள்ளலாம். அகழ்வாராய்ச்சிகள் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள்களை ஆய்ந்து தமிழன் தன் பண்டைய பண்பாடு, வாழ்க்கை நிலையினை ஓரளவு தெரிந்துகொள்ளலாம். அக்காலத் தமிழர் நீர்ப்பாசனத்திற்கென கிணறு, சிறு குளம், நீர்த்தேக்கம் போன்றவற்றை உருவாக்கினர்கள். இதற்கேற்ப அவர்கள் அதிக எண்ணிக்கையில் வசித்த செங்கற்பட்டு மாவட்டத்தில் இன்றும் பண்டைய குளங்களும் ஏரிகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இவர்கள் மேட்டுப்பாங்கான இடங்களில் தங்கள் இருக்கைகளை அமைத்துக் கொண்டார்கள். தண்ணீர் வசதிக்கேற்ப ஆறுகள், குளங்கள், ஆகியவற்றின் அருகிலே

யும் வாழத் தலைப்பட்டார்கள். இவ்விடங்களில் முதுமக்கள் தாழிகள் இன்றும் காணப்படுகின்றன. இவர்கள் தங்களின் மூதாதையரான புதிய கற்கால மக்களைக் காட்டிலும் மிகச் சிறப்பான நாகரீகத்தைத் தோற்றுவித்தவராவர்.

இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலும், குறிப்பாக மத்தியதரைக் கடல் பகுதியிலும், இப்பண்பாட்டுக்குரிய தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நாகரீகம் சுமார் 1,500 வருடங்கள் படிப்படியாக வளர்ச்சியுற்று வந்திருக்கிறது. மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்குரிய பல புதுப் புதுக் கண்டுபிடிப்புகள் தோன்றலாயின. நாடோடிகளாய் விலங்குகளுடன் விலங்குகளைப் போலத் திரிந்து வந்த மனிதர்கள் ஏற்றமிகு வாழ்க்கையை எட்டிப் பிடித்தார்கள். நம்நாட்டில் இன்றைய அளவும் காட்சிப் பொருள்களாக விளங்கும் மெகலிதியச் சான்றுகள் காலத்தளவில் பிற்பட்டதாயும், மத்தியதரைக்கடல் மெகலிதியச் சான்றுகளுடன் ஒப்பிட்டு நோக்குதலுக்கேற்பவும் அமைந்திருப்பதால் இந்த மெகலிதியப் பண்பாட்டு மக்கள் வெளியிடங்களிலிருந்து இந்தியாவிற்கு வந்திருத்தல் வேண்டும் என்று விவாதிக்கப்படுகின்றது. எது எப்படியாயினும் இவர்கள் தென்னிந்தியாவில் நீண்டகாலம் வாழ்ந்து பண்பாட்டளவில் பெரிய மாறுதல்களைச் செய்தவர்களாவார்கள்.

இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் தமிழகத்தில் அரசு, அமைச்சு, சமுதாயம், சமயம், பொருளாதாரம் போன்றன எவ்வளவு ஏற்றமுற்று விளங்கி வந்தன என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இத்துறைகளில் இலக்கியங்கள் காட்டும் சான்றுகளுடன் நின்றுவிடாது பல அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டு அவை தரும் சான்றுகளை இலக்கியம் காட்டும் சான்றுகளுடன் ஒக்க நோக்கிய பின்னர் ஒரு சிறப்பான முடிவிற்கு வருதல் இன்றியமையாததாகும். இதனை முன்னிட்டே இன்று அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையும், சென்னைப் பல்கலைக் கழகமும் அடுத்தடுத்து அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டவண்ணம் உள்ளன.

பொருளாதாரம்

தொழில்கள் :— வேளாண்மைத் தொழில் இம்மக்களின் கைவந்த இன்றியமையாத தொழிலாகும். இதற்கேற்பத் திருக்காம்புலியூர் நிலப்படிவங்களில் நெல், உமி, கரிந்த நெற்குவியல்

போன்றன தென்பட்டன. மேலும், தோண்டி எடுக்கப்பட்ட இரும்பு அரிவாள், ஏர்க்கொழு போன்றன உழவுத் தொழிலில் மக்கள் பெரிதும் ஈடுபட்டிருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்து உள்முகப்பு உள்ள நீர்த்தேக்கமும், திருக்காம்புலியூர் நெற்குதிரும் இத்தொழிலின் இன்றியமையாமையைக் குறிக்கின்றன. மக்கள் நீர்த்தேக்கங்களில் மீன் பிடித்தும். புதர்க் காடுகளில் விலங்குகளை வேட்டையாடியும் வந்தார்கள்.

நெசவுத் தொழில்: வேளாண்மைக்கு அடுத்தாற்போன்று நெசவுத் தொழிலும். ஆடைகளுக்குச் சாயம் ஏற்றுதலும் அவர்களின் முக்கியத் தொழில்களாக இருந்தன. அரிக்கமேடு, உறையூர், திருக்காம்புலியூர் ஆகிய இடங்களில் இதற்கான சான்றுகள் நிறையக் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட செங்கல்லாற் கட்டப்பட்ட ஒரு தொட்டி ஆடைகளுக்குச் சாயம் ஏற்றுவதற்காகக் கட்டப்பட்டதாகும். இதே போன்று. ஆனல் சிறிய தொட்டி ஒன்று உறையூரிலும் தோண்டி எடுக்கப்பட்டது. இத்தொட்டிகள் பெரிய செங்கற்களைக் கொண்டு தேவையான உள், வெளித் திறப்புகளுடன் கட்டப்பட்டவை. திருக்காம்புலியூரில் பட்டு நூல் கட்டு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இது கி.பி நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டிடைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். இதற்கிடையில் பலவிதமான உடையலங்காரங்களைக் கொண்ட சுடு மண்ணாலான ஆண், பெண் உருவங்கள், நூல் நூற்கும் 'தக்கிளி' போன்றவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது போன்ற பொருட்கள் அக்கால மக்கள் துணி நெய்யவும், அவற்றுக்குச் சாயம் ஏற்றவும் கற்றிருந்தார்கள் என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

இரும்பு, செப்பு வேலைப்பாடுகள்: உலோகத்தை உருக்குதல், பிறகு அவற்றைப் பல வடிவங்களில் கருவிகளாக வார்த்தல், என்ற இரு கலைகளிலும் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர். இம்மாதிரியான வேலைப்பாடுகளில் இரும்பு, செப்பு, வெண்கலம், தகரம், வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்கள் அவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. நீண்ட பட்டாக் கத்தி, சிறிய சுத்தி, ஈட்டி. வாள் போன்ற போர்த் தளவாடங்களும், அரிவாள், ஏர்க்கொழு, கோடரி போன்ற வேளாண்மைக் கருவிகளும், பாத்திரங்கள், கோப்பைகள் முதலியவையும். ஆபரணங்களாகிய மணி, வளையல், மோதிரம், போன்றவையும். நாணயங்களும் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்ற இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. வெள்ளியும், தங்கமும், நாணயங்

கள் ஆபரணங்கள் செய்ய மிகுதியாகப் பயன்பட்டு வந்தன தமிழகத்தில் பல இடங்களில் வெள்ளி 'பஞ்ச் மார்க்' (Punch marked coins) நாணயங்கள் நிறையத் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. தங்கத்தால் செய்யப்பட்ட நாணயங்களையும், பாத்திரங்களையும் அக்கால மக்கள் பயன் படுத்தினர்கள் என இலக்கியங்கள் கூறினும், அத்தகைய அரிய, பெரிய பொருள்கள் ஏதும் இதுவரை தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் கண்டெடுக்கப்படவில்லை என்பதனையும் இங்குக் குறிப்பிட வேண்டியுள்ளது.

சுடுமண் வேலைப்பாடு: (Terracotta Art) புதிய கற்காலத்திலிருந்து மனிதன் களிமண்ணைக் கொண்டு பாத்திரங்கள் செய்யவும், பொம்மைகள் செய்யவும் பின்பு அவற்றைத் தீயில் இட்டுச் சுட்டுத் தனது அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளவும் அறிந்திருக்கின்றான். பையம்பள்ளி அகழ்வாராய்ச்சியில் அதுபோன்ற பல வகையான சுடுமண் பொருட்கள் தோண்டி எடுக்கப்பட்டன. எனினும் இக்கலையானது கி. பி. இரண்டாவது, மூன்றாவது நூற்றாண்டுகளில்தான் முழுமையான வளர்ச்சியடைந்திருக்கிறது. இக்காலத்திய சுடுமண் ஆண், பெண் உருவங்கள், பலவிதமான அணிகலன்களுடன் மெல்லிய உடைகளை அணிந்த பாணியில் காட்சியளிக்கின்றன இதுபோன்ற உருவங்கள் அரிக்கமேடு, திருக்காம்புலியூர், உறையூர் ஆகிய இடங்களில் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. சமயச் சடங்குகளை முன்னிட்டும், மனிதன் அன்றாட வாழ்க்கைத் தேவையை முன்னிட்டும் களிமண் பாத்திரங்களும் இன்ன பிற பொருட்களும் நிறையச் செய்யப்பட்டுப் பக்குவமாகச் சுட்டெடுத்துப் பயன்படுத்தப்பட்டு வந்தன தமிழகத்தில் ஏராளமான இடங்களில் இவை கிடைத்துள்ளதால் அக்கால மக்கள் இக்கலையில் பெரிதும் ஆர்வம் காட்டினர்கள் என்றும், இக்கலையை நன்கு வளர்த்தார்கள் என்றும் அறிய முடிகின்றது. நம் நாட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட இவையாவும் கையால் செய்யப்பட்டனவேயாகும் இவற்றில் சில நீளப்பகுதியில் உச்சிமுதல் தாள்வரை உட்பக்கமாக வெற்றிடம் விடப்பட்டுச் செய்யப்பட்டவை. ஆனல் பெரும்பான்மையான உருவங்கள் வெற்றிடம் விடப்படாமலேயே முழுதும் களிமண்ணால் செய்யப்பட்டனவாகும். மேலை நாட்டு நாகரீகம் நம் நாட்டில் ஈர்க்கப்பட்டதைச் சில உருவங்கள் காட்டுகின்றன எடுத்துக்காட்டாக, திருக்காம்புலியூரில் தோண்டி எடுக்கப்பட்ட புத்தரின் உருவம் சுருண்ட முடியுடன் காணப்படுகின்றது. இதுபோன்ற முடி ஒப்பனையை காந்தார நாகரீக ஆண், பெண் உருவங்களிலேயே காணலாம்.

வண்ண — ஆபரண வேலைப்பாடு : சுட்ட மட்பாண்டங்கள் மீது அழகான வண்ண வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. வர்ணப் பூச்சும், வர்ணப் புள்ளிகளும் சுடுமண் உருவங்கள், மணிகள், வளையல்கள் மீதும் காணப்படுகின்றன. இரும்பு, வெண்கலப் பாத்திரங்களின் மீது விலங்குகளின் உருவங்கள், ஓவியங்கள் போன்றவை வரையப்பட்டுள்ளன. அக்கால மக்கள் இத்துறையில் வைத்திருந்த ஆர்வத்தையும், சிறந்த கலைத்திறனையும் இவை காட்டுகின்றன.

வாணிகம் : கிருத்துவ நூற்றாண்டின் முதற் பகுதியில் தமிழகத்திற்கும் உரோமாபுரிக்கும் இடையே வாணிகம் தொடர்ந்து இடையறாது இருந்து வந்தது. அக்கால இலக்கியங்கள் இவ் வாணிகத் தொடர்பினைப் பற்றி ஆங்காங்கே பகர்கின்றன. தாலமி குறிப்புகள் இத்தொடர்பினைப் பற்றிக் கூறுகின்றன. அத்துடன் அகழ்வாராய்ச்சிகளின் போது தோண்டி எடுக்கப் பட்ட உரோம நாட்டு நாணயங்கள், மணிகள், பலவிதமான மட்பாத்திரங்கள், கண்ணாடிப் பொருள்கள் போன்றன இத் தொடர்பினைப் பற்றி நாம் அறிந்து கொள்ளச் சான்றுகளாக அமைகின்றன. அரிக்கமேடு, செங்கமேடு, உறையூர், காவிரிப் பூம்பட்டினம், கொற்கை ஆகிய இடங்களில் உரோம நாட்டு மட்பாண்டங்கள் நிறைய கிடைத்துள்ளன என்பதே இதற்குச் சிறந்த சான்றாகும்.

நாணயங்கள் : தமிழகத்திற்கும் உரோமாபுரிக்குமிடையே வாணிகத் தொடர்பு இருந்துவந்தது என்றாலும் எந்த நாணயத்தை ஆதாரமாகக் கொண்டு அவர்கள் வாணிகம் செய்து வந்தனர் என்பதனை இன்னும் நாம் சரியாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை. தமிழகத்தில் பல இடங்களில் 'பஞ்ச் மார்க்' நாணயங்களும், உரோமர் நாணயங்களும் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டபோதிலும் அவற்றின் மூலம் மேற்குறிப்பிட்ட சிக்கலில் தீர்வுகாண முடியவில்லை. நாணயங்களின் மீது காணப்படுகின்ற குறிகள், அவற்றின் எடை ஆகியவைபற்றி ஆராய்ச்சியாளர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளார்கள். இது விரைவில் ஆய்ந்து தீர்க்கப்பட வேண்டிய ஒரு ஐயமாகும். எனினும் இந்த 'பஞ்ச் மார்க்' நாணயங்கள் உள் நாட்டு வியாபாரத்திற்காவது பயன்படுத்தப் பட்டிருக்கவேண்டும் என்று கருத வாய்ப்புள்ளது.

கட்டட வேலைப்பாடுகள் : பழைய கற்கால மனிதன் விலங்கினைப் போலத் தனக்கு வேண்டிய உணவைத் தேடித்திரிபவனாக உலா

வினன். அவன் வசிப்பதற்கு நிலையான இடம், இல்லம் ஏதும் அமைத்துக்கொள்ளவில்லை. ஆங்காங்கே கண்ணுக்குத் தென் பட்ட மலைக் குகைகளிலும், மரப் பொந்துகளிலும் தங்கி வசிக் கத் தலைப்பட்டான். கால வளர்ச்சிக்கேற்பப் புதிய கற்கால மனிதன் தனக்கென ஒரு வீட்டை அமைத்துக்கொண்டான். மண்ணைக் கொண்டு சுவர்கள் எழுப்பி, வீட்டுக் கூரையை இலை தழைகளால் வேய்ந்து கொண்டான். மைசூர் மாநிலத்தில் 'தெக்கல கோட்டா' என்னும் இடத்தில் புதிய கற்கால மக்கள் இதுபோன்ற வீடுகளை அமைத்துக் கொண்டதற்கான சான்று கள் கிடைத்துள்ளன. இவ்வீடுகள் வட்ட வடிவமான தளத் தைக் கொண்டவை இம் மக்களின் வழித் தோன்றல்களாகிய 'மெகலிதிய' மக்கள் தங்கள் வீடுகளை மிக வசதியாகவும், நேர்த்தியாகவும் கட்டிக்கொண்டார்கள். இவர்கள் செங்கற்களை மிகுதியாகப் பயன்படுத்திச் சுவர்களைக் கட்டலானார்கள். காலப் போக்கில் சுட்ட செங்கற்களைக் கொண்டு வீடுகள் கட்டத் தொடங்கினர்கள். சுண்ணம்பும், கெட்டியாக களிமண்ணும், சிறியதும், பெரியதுமான கூழாங் கற்களும் சுவர்கள் கட்ட இடை யிடையே பயன்படுத்தப்பட்டன வீடுகள் மிக எளிய பாணியில் கட்டப்பட்டன.

வஞ்சி, காஞ்சி, மதுரை, உறையூர், காவிரிப்பூம்பட்டினம், போன்ற புகழ் மிக்க பட்டினங்கள் அன்று சிறந்து விளங்கின இப்பட்டினங்கள் பெரிய கோயில்களையும், அரண்மனைகளையும் அகன்று நீண்ட தெருக்களையும் கொண்டு விளங்கின. சிற்ப சாத்திர நூல்கள் குறிப்பிட்ட விதி முறைகளுக்கேற்பக் கட்ட டக்கலை வல்லுநர்களைக் கொண்டு கட்டடங்கள் கட்டப்பட்டன.

மண் சுவர்களினூடே சம இடைவெளியிட்டு மரத்தூண் களை நிறுத்தி அவற்றின்மீது கூரை வேயப்பட்டது. அது போன்ற மரத்தூண்கள் நிறுத்தப்பட்ட குழிகளின் அமைப்பைக் கொண்டு பார்க்கப் போனல் அக்காலத்தில் கட்டப்பட்ட வீடு களின் அடிப்பாகம் வட்ட வடிவமாகவோ, சதுரமாகவோ நீண்ட சதுரமாகவோ இருந்திருக்கவேண்டும் எனக் கணிக்க லாம் அவர்கள் தங்கள் வீட்டுத் தரையினை நேர்த்தியாகக் களிமண்ணிட்டு மெழுகியிருக்கிறார்கள். ஒவ்வொருவரின் பொரு ளாதார நிலைக்கேற்பவும், தேவைக்கேற்பவும் வீடுகள் கட்டப் பட்டன. மொகஞ்சதாரோ, அரப்பா போன்று தமிழகத்தின் பெரும் அளவிற்கு அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ளுவோ மாயின் அக்காலக் கட்டடக் கலைப்பற்றிய நுணுக்கமான தகவல் களைப் பெறமுடியும்.

சமுதாயம்

மக்கள் மேற்கொண்ட தொழில்களை முன்னிட்டுச் சமுதாயம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது பலதரப்பட்ட இனத்தவர்கள் வாழ்ந்தார்களென்ற குறிப்புகளும், அவர்கள் வசித்த தெருக்களைப் பற்றிய வர்ணனைகளும் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன இதற்கான சான்றுகள் இதுவரை நடத்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கிடைக்கவில்லை. ஆனால் அவர்களது பழக்க வழக்கங்கள், உணவு, உடை, பொழுது போக்கு விளையாட்டுகள் போன்றவற்றைப் பற்றிய குறிப்புகள் அகழ்வாராய்ச்சி வாயிலாக நமக்குக் கிடைத்துள்ளன.

அரிசியும், பார்லியுமே அவர்கள் உட்கொண்ட முக்கிய உணவுப் பொருட்கள், ஆடவரும் பெண்டிரும், உடுத்தியிருநத உடை வகைகளைச் சுடுமண் உருவங்கள் காட்டுகின்றன. ஆடவரும், பெண்டிரும், மார்பிலும் இடையிலும் ஆடை அணிந்திருந்தனர். மிக மெல்லிய ஆடை நெய்யும் கலையில் அவர்கள் தேர்ச்சி பெற்று விளங்கினர்கள். பொதுவாக ஆடவர் தலையில் தலைப்பாகை அணிந்து கொண்டனர். அவர்கள் தங்கள் தலை முடியைப் பல பாணியில் வாரி முடிந்துகொண்டார்கள். ஆடவரும், பெண்டிரும் பலவகையான அணிகலன்களை அணிந்து தங்களை அழகுபடுத்திக் கொண்டார்கள். மணிகள், காதணிகள், வளையல்கள், மோதிரங்கள், போன்ற ஆபரணங்கள் கல், களிமண், கண்ணாடி, உலோகம் போன்றவற்றால் செய்யப்பட்டது.

வேட்டையாடுவதில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டினர். நீந்துதல், படகு விடுதல், கத்திச் சண்டையிடுதல் போன்ற விளையாட்டுகளையும் அவர்கள் நாடினர். தாயம், சதுரங்கம் போன்ற பொழுதுபோக்கு விளையாட்டுகளிலும் ஈடுபட்டனர் இவ்விளையாட்டுகளுக்குரிய சுடுமண் காய்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் நிறையக் கிடைத்துள்ளன. பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும், பானை ஓடுகளும் நமக்கு அவர்களது மொழியைப் பற்றி ஒருசில குறிப்புகளை நல்குகின்றன. தமிழ் அவர்களது தாய்மொழியாகும். அவர்களது பழக்கத்தில் இருந்துவந்த தமிழ் எழுத்துக்களின் வடிவங்களைப் பற்றி நாம் அறிந்துகொள்ளத் தேவையான சான்றுகளும், சுருங்கச் சொல்லின் வாய்ப்புகளும் கிடைக்கவில்லை. தமிழப் புலவர்கள். வரலாற்று ஆசிரியர்கள், தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆகியோரின் ஒத்துழைப்பினலும், ஆர்வத்தினலுமே பண்டைய தமிழக வரலாற்றினை தக்க சான்றுகளுடன் மிகத தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

சமயம்

பழங்காலத்தில் மக்கள் இயற்கைச் சக்தியினைப் போற்றி வந்திருக்கின்றனர். அவர்கள் எழு ஞாயிறு, நிலா, கடல், வானம், ஆறு, நீர்த்தேக்கம், மலை, மரம், செடி, கொடிகள் போன்ற இயற்கைப் படைப்புகளில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அவற்றை வழிபட்டார்கள். இதற்கிடையில் சைவ, வைணவக் கடவுளர்களை ஆண் வடிவிலும், பெண் வடிவிலும் வழிபட்டார்கள். மேலும் புத்த, சமணத் துறவிகளையும் வழிபட்டார்கள். வெவ்வேறு கடவுளர்களுக்கு அவர்களது எண்ணப்படி களிமண்ணால் உருவ அமைப்பு கொடுத்துத் தீயிலிட்டுச் சுட்டுப் பின்னர் அவற்றை வணங்கி வந்தார்கள். இறகுள்ள தேவதை, மரத்தில் உறங்கும் தேவதை போன்றவற்றையும் வழிபட்டார்கள் என்பதற்கான சான்றுகள் திருக்காம்புலியூர் அகழ்வாராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளன. தாம் பிறந்த நிலத்தைத் தாயெனப் போற்றி வழிபட்டனர். புவி அன்னையை (Mother Goddess) இடைபெருத்த பெண்ணுருவில் அமைத்து வழிபட்டார்கள் என்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. பண்டை சமயத்தின் சிறப்புகளில் இதுவும் ஒன்றல்லவோ. புவி அன்னையை வழிபடுதல் இந்து சமயத்தின் தொடக்கமெனலாம். ஏன் உலகில் தோன்றிய பல்வேறு சமயங்களின் தொடக்கம் என்று கூடக் கூறலாம். வழிபடுவோரை அவர்களுடைய ஒழுக்க நெறிகளுக்கு ஏற்ப வழுவாது காக்கும் குணமுடையவள் இக் கடவுள். இம்முறையையே சக்தி வழிபாடு என்று பிரிதொரு பெயரில் பிற்காலத்தில் அழைக்கத் தலைப்பட்டனர். திருமகளாகக் கருதப்பட்ட இக் கடவுளை மக்கள் நிர்வாண கோலத்திலும் வழிபட்டார்கள்.

திருக்காம்புலியூரில் கண்டெடுக்கப்பட்ட நாகலிங்கம், 'மூசிகம்', பாலகிருட்டிணன் போன்ற தெய்வத் திரு உருவங்களும், அலகரையில் அகப்பட்ட அமர்ந்த நிலையிலிருக்கும் விநாயகரின் திரு உருவமும், தமிழகததின் 4-ம். 5-ம் நூற்றுண்டுகளில் மக்கள் இக்கடவுளர்களை வழிபட்டதனையும், சைவ, வைணவ சமயங்களின் சிறப்புகளையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. வெண்கலம், சுடுமண் போன்றவற்றால் செய்யப்பட்ட புத்தர் திரு உருவங்கள், 'ஸ்வஸ்திகம்' 'ஸ்ரீவத்சம்' (இலக்குமி) போன்ற புத்த சமயச் சின்னங்களும் நமக்குப் பரவலாகக் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினத்து புத்த விகாரமும், காஞ்சீபுரத்து ஸ்தூபியும் அக்காலத்தில் நம்நாட்டில் புத்தமதம் தழைத்திருந்ததை உணர்த்துகின்றன.

இறந்தவரை வழிபடல் (cult of the Dead) இறந்தவர்களைப் போற்றுதலும், வழிபடுதலும், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டே இருந்துவந்த வழக்கங்களாகும். பழங்கற்கால மனிதர்கள் கூட இறந்தோரின் வாழ்க்கை அனுபவங்களை இயற்கைக் கற்குகைகளின் சுவர்களில் ஓவியமாக எழுதிவைத்துள்ளார்கள். புதிய கற்கால மக்கள் இறந்தவர்களை அவர்கள் வாழ்நாளில் பயன்படுத்திய பொருட்களுடன் குழியிலிட்டுப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டார்கள், இறந்தவர்களைக் குழியிலிட்டுப் புதைத்தல், பெரிய தாழியிலிட்டுப் புதைத்தல், ஆகிய இரண்டு முறைகளையும் 'மெகலிதிய' மக்கள் பின்பற்றி வந்தனர். இவர்களது புதை குழிகளில் ஒரு சில இரண்டு பக்கவாட்டுத் தட்டைப் பாறைகளையும், ஒரு பெரிய அகலமான மூடுகல்லினையும் கொண்டுள்ளன. இன்னும் சில மூடுகல்லுடன் நாற்புறங்களிலும் நான்கு உயரமான தட்டைக் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற கல்லறைகள் பொதுவாகக் கிழக்குப் பக்கத்தில் ஒரு சிறிய இடைவெளியைக் கொண்டுள்ளன. இந்த இடைவெளியை இறந்தோரின் ஆன்மா, தான் வேண்டும்போது கல்லறைக்குள் நுழையும், வெளியே செல்லவும் பயன்படுத்தக் கூடும் என்று அம் மக்கள் நம்பி வந்தார்கள். சானூர், குன்றத்தூர் போன்ற இடங்களில் இக்கல்லறைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

இறந்தவர்கள் நீட்டிக் கிடத்திய நிலையில் கிழக்கு-மேற்காக இட்டுப் புதைக்கப்பட்டுள்ளனர். ஒரு சில கல்லறைகளில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இறந்தவர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்த பின்னரும் உயிர் வாழ்வர் என்று நம்பியே அவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் பயன்படுத்தி வந்த அன்றாடத் தேவைப் பொருட்களை அவர்களோடு சேர்த்துப் புதைத்து வந்தார்கள் போலும்.

மக்களுக்கு இன்னல்கள் இழைத்து வந்தவர்களைத் தாக்கி வீரச் செயல் புரிந்து இறந்தவர்களை நினைவு கொள்ளும் பொருட்டு அவ்வீரர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டு வழிபடும் வழக்கம் நம் நாட்டில் இருந்துவந்தது என்பது நமக்கு நன்ருகத் தெரியும். அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை மலைபடுகடாம் போன்ற இலக்கியங்கள் இதனைப்பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றன. அதுபோன்று

(241-ஆம் பக்கம் பார்க்க)

நாட்டுப் பாடல்

பேராசிரியர். வ. பெருமாள்,
எம். ஏ. பி. டி. எம். ஆர். ஏ. எசு.,
முதல்நிலைக் கல்லூரி,
உரிகம். கோலார் தங்கவயல்.

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

மண்ணைப் பயன்படுத்தித் துணியிலுள்ள அழுக்கை எடுப்பவன் மண்ணன். மண்ணன் என்னும் சொல்லே இப்போது வண்ணன் என்று மாறியிருக்கின்றது. அழுக்குத் துணியை வெளுக்கும் சலவைத் தொழிலாளிகள் ஆடையைக் கல்லில் துவைக்கும் போதும், பிழியும் போதும், வெயிலில் காயப்போடும் போதும் பாடிக்கொண்டே பணிபுரிவார்கள். அப்பாட்டும் பணியும் இணைந்தே செல்லும். இதோ ஒரு பாட்டு. —

கந்தை புழிஞ்சளவு — புழிஞ்சளவு சொல்லம்மா சொல்லு
ஏலம்மா ஏலு
காரைமேலே போட்டொணத்தி — தாயே போட்டொணத்தி
வெள்ளை புழிஞ்சளவு — புழிஞ்சளவு சொல்லம்மா சொல்லு
ஏலம்மா ஏலு
வேலிமேலே போட்டொணத்தி — தாயே போட்டொணத்தி
பச்சைப் பயிரொடச்சி — பயிரொடச்சி சொல்லம்மா சொல்லு
ஏலம்மா ஏலு
பத்தினியாள் சீலைக்குத்தான் — தாயே சீலைக்குத்தான்
உளுத்தம் பருப்பொடச்சி — பருப்பொடச்சி சொல்லம்மா
ஏலம்மா ஏலு
உத்தமியாள் சீலைக்குத்தான் — தாயே சீலைக்குத்தான்.

கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடும்போது பாடுகின்ற பாட்டு கரகப்பாட்டு எனப்படும். முத்துமாரிக்கு 'ஆடிவரும் பொன் கரகம்' எடுப்பது மரபு. மெய்யன்பர்கள் காவடி எடுத்துக்கொண்டு திருத் தலங்களுக்கும் கோவில்களுக்கும் செல்லும் போது பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டே செல்வது மரபு. அவை காவடிப் பாட்டு அல்லது காவடிச் சிந்து எனப்படும். திருத்தணி, திருச்செந்தில், பழநி, தணிகை முதலிய திருத்தலங்களில் 'வேல் வேல்' என்று முழங்கிக் கொண்டு முருகனுக்குக் காவடி சுமந்து செல்வதை நாம் இன்றும் காண

லாம். பக்தி இலக்கியங்களில் முதன்மையானதும் தொன்மை யானதுமான திருமுருகாற்றுப்படையில் நக்கீரர்

நாவியல் மருங்கின் நவிலப் பாடி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
ஆடுகளஞ் சிலம்பப் பாடி
யானறி அளவையின் ஏத்தி

என்று மெய்யன்பர்கள் முருகனைப் பாடி அகமகிழ்வதை நன்கு விளக்கியுள்ளார்.

ஊர்ப்புறங்களில் பூசாரிகள் ஆடிப்பாடித் தெய்வ ஆவே சத்தை வரவழைப்பதற்கு முன்னர் விநாயகரை வணங்கிப் பாடு தல் உண்டு. இவற்றைப் பூசாரிப் பாட்டு என்று குறிப்பிடலாம். பூசாரிப் பாடல்களில் ஒன்று பின் வருமாறு. —

முந்திமுந்தி விநாயகரே — ஓம் ஓம்
முக்கணனர் தம்மகரே — ஓம் ஓம்
கந்தனுக்கு முன்பிறந்த — ஓம் ஓம்
கற்பகமே முன்நடவாய் — ஓம் ஓம்
வேலவற்கு முன்பிறந்த — ஓம் ஓம்
விநாயகரே முன் நடவாய்

(239-ம் பக்கம் தொடர்ச்சி)

வீரர்களை வழிபடும் வழக்கம் இன்றும் நம்மவர்களிடையே இருக் கின்றது. இறந்த வீரரொருவருடைய உருவம் நன்ருகச் சமைக் கப்பட்ட கல்லின் ஒரு பக்கத்தில் செதுக்கப்படும். பின்னர் அவரது ஊரும், பெயரும், அக்கல்லின், மேற்புறத்திலோ, கீழ்ப்புறத்திலோ எழுதப்படும். சமயச் சடங்குகளுடன் அந்தக் கல் நாட்டப்பட்டு வழிபாடு நடத்தப்பெறும். சில வேளைகளில் ஞாயிறு, நிலா, விளக்கு, மலர்கள், போன்றவற்றின் உருவங் கள் அக்கல்லில் செதுக்கப்படுவதும் உண்டு- குறிப்பிட்ட காலங் களில் இந் நடுகற்களுக்கு பலியிடுவதும், மலர்களை மாலைகளாக அணிவித்தலும், வழிபாடுகள் செய்வதும் உண்டு.

கணவர் இறந்தவுடன் வெந்தழலிற் புகுந்து உயிரைவிட்ட வீர மங்கையருக்கும் நினைவுக் கற்கள் நாட்டப்பட்டன. இதற்கு 'சதிகல்' (Sati Stone) அல்லது 'மாசதிகல்' என்ற பெயர் வழக்கத்திலிருந்து வந்தது. இச்சதிகற்களையும் மக்கள் வழி பட்டார்கள். (முற்றும்)

பூசாரி பாடுகின்ற விநாயகர் துதியைத் தவிரப் பாமர மக்கள் வேடிக்கையாகப் பாடும் பிள்ளையார்ப் பாட்டும் உண்டு. ஒன்றை மட்டும் இங்குக் காண்போம்.

பிள்ளையார் பிள்ளையார் எங்கெங்கே பிள்ளையார்
கத்திரித் தோட்டத்திலே களைபறிக்கிறார் பிள்ளையார்
அங்கேயும் போய்ப்பார்த்தேன் அவர் எங்கேயும் காணோமே
வாணிச்சித் தெருவிலே விளையாடுகிறார் பிள்ளையார்
அங்கேயும் போய்ப் பார்த்தேன் அவர் எங்கேயும் இல்லையே

இவ்விரு பாடல்களும் பிள்ளையார் வழிபாடு பொது மக்களிடையே பரவியிருந்ததைத் தெளிவு படுத்துகின்றன.

மாரியம்மன் வழிபாடு தமிழ் உலகம் முழுவதையும் பரவியிருப்பதைக் காணலாம் பாமர மக்களுக்கு மாரியம்மையிடம் மிகுந்த ஈடுபாடும் ஆழ்ந்த பக்தியும் உண்டு. அவற்றின் பயனாக எழுந்த பாடல்கள் பல. 'யார் கடன் நின்றாலும் மாரி கடன் ஆகாது' என்பது பழமொழி.

ஆயிமகமாயி ஆங்காரக் காரியவள்
நீலமகமாயி நிட்டூரக் காரியவள்
உச்சிமலை மேலே ஊமத்தம் பூப்போலே
பச்சைக்கிளி போலே பறக்கிறா மாரியாத்தா
ஆதிபரஞ்சோதி அழகான ராக்காயி
கண்ணனூரு பேட்டையிலே கண்வளரும் தாயாரு
ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது
மாரிகடன் தீர்த்தவர்க்கு மனக்கவலை தீரும் அம்மா

ஒன்றாங் கரகமடி தாயே — அது
ஓடிவரும் பொன்கரகம் இப்போ
மூன்றாம் கரகமடி தாயே — அது
முந்திவரும் பொன்கரகம் இப்போ
அஞ்சாங் கரகமடி தாயே — அது
ஆடிவரும் பொன் கரகம் இப்போ
ஏழாம் கரகமடி தாயே — அது
எடுத்தாலும் பொன் கரகம் இப்போ
பாம்பாலே சும்மாடு தாயே — அதன்
படத்தாலே முக்காடு தாயே

வேப்பிலையும் பொன்கரகம் வீதி விளையாடி வர
ஆயிரம் கண்ணுடையாள் அலங்காரி வாருமம்மா
நாலுமூலை ஓமகுண்டம் நடுவே கனகசபை
கனகசபை வீற்றிருக்கும் காரண சவுந்தரியே
காரண சவுந்தரியே நாரணனார் தங்கையரே
திக்கெல்லாம் ஆண்டவளே திகம்பரியே வாருமம்மா.

இரவு நேரங்களில் பொழுது போக்குக்காகப் பாடப்படுகின்ற பாடல்களில் முதன்மையானது வில்லுப்பாட்டு. முத்தாரம்மன், இசக்கி, நீலி, சங்கிலி, முத்துப்பட்டன், சின்னத்தம்பி, பூதத்தார், காத்தன், சுடலை மாடன் முதலியோர் கதைகள் வில்லுப்பாட்டில் இடம்பெறும். வில்லுப்பாட்டில் ஈடுபட்டிருப்போர்க்கு நேரம் போவதே தெரியாது. அவ்வளவு சுவையான பாட்டு அது. கோயிலில் விளக்கேற்றுபவன் வில்லுப்பாட்டின் இசையில் ஈடு பட்டு மெய்மறந்து விடுவான்.

'வில்லடிச்சான் கோயிலிலே விளக்குப்
பொருத்த நேரம் இல்லை' என்பது பழமொழி.

வில்லுப் பாட்டு வெறும் வாய்ப்பாட்டாக அமையாமல் பக்க வாத்தியங்களுடன் கூடிய முழு இசை நிகழ்ச்சியாகவே இருக்கும். பாமர மக்கள் அனைவரும் பெரிதும் ஈடுபட்டுச் சுவைத்து மகிழு மாறு வில்லுப்பாட்டில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் இடம் பெற்றிருக்கும். நாடோடிக் கலையாகிய வில்லுப்பாட்டை 20-ஆம் நூற்றுண்டில் பொதுமக்களிடையே பரப்பிய பெருமை கலை வாணர் என். எசு. கிருட்டிணனைச் சாரும். கொத்தமங்கல சுப்பு, சாத்தூர் பிச்சுக்குட்டி முதலியோர் வில்லுப்பாட்டைத் தொடர்ந்து மக்களிடையே பரப்பி வருகின்றனர்.

வில்லுப்பாட்டைப் போலவே பொழுது போக்கிற்காகப் பாடப்படும் மற்றொரு வகையான பாட்டு கோமாளிப் பாட்டு எனப் படும், இவ் வேடிக்கைப் பாட்டு கேட்பதற்குச் சுவையாகயிருக் கும். பின் வரும் பாடல் கோமாளிப் பாட்டு வகையைச் சேர்ந்தது.

திருப்பதிக்குப் போயிவந்தேன் — நாராயணா
திருமொட்டை அடித்துவந்தேன் — நாராயணா
அங்கே ஒரு சோளக் கொல்லை — நாராயணா
அதிலே ஒரு கதிர் ஓடிச்சேன் — நாராயணா
கொல்லைக்காரன் கண்டுகிட்டான் — நாராயணா
கோலைக்கொண்டு அடிச்சிப்போட்டான் — நாராயணா

காலையிலே எழுந்திருந்து நாராயணு — நான்
காலுகையை கழுவிக்கிட்டு — நாராயணு
பட்டை நாமம் இட்டுகிட்டு நாராயணு — நான்
பழைய சோத்தை தின்னுபுட்டு — நாராயணு
பூக்குடலை எடுத்துக்கிட்டு நாராயணு — நான்
பூப்பறிக்கப் போகையிலே — நாராயணு
தோட்டக்காரன் கண்டுகிட்டு நாராயணு — என்னைத்
தொப்பு தொப்புன்னு போட்டடிச்சான் — நாராயணு.

இத்தகைய கோமாளிபபாட்டுக்கள் சிறுவர்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர வல்லன. இத்தகைய பாடல்களையே சிறுவர்கள் மிகவும் விரும்பிப் பாடுகின்றார்கள்.

குடுகுடுப்பைக்காரன் உடுக்கையைக் குடுகுடு என்று அடித்துக்கொண்டு ஒரே முச்சில் விரைவாகப் பாடிக் கொண்டே வீடு வீடாகச் செல்வான்.

காளி கபாலி மகாசூலி மகேசுவரி — கருணை
செய்ய ஓடிவா
என்னம்மா கருணை செய்ய ஓடிவா
ஆலில் துயின்றதோர் மாலின் சகோதரி வாலை
மனோன்மணி
மேல மலையாளம் வாழும் பராபரி பாலன்முன்
ஓடிவா வா
சக்கம்மா ஓடிவா வா

குடுகுடுப்பைக்காரன் பாடும் இப்பாட்டை கேட்கும் மக்கள் பலர் இறைவியின் அருளால் தான் அவன் பாடுகிறான் என்று நம்பி விடுகிறார்கள்.

இரு உள்ளங்களின் இணைப்பே காதல் எனப்படும். நாடோடி இல்லத்தில் காதல் பாட்டுக்குத் தனியிடம் உண்டு.

உன் மனமும் என் மனமும்
ஒரு மனமாய் இருந்ததென்றால்
சிக்கந்தர் மலையைக் கூடச் செந்தூக்காய்த்
தூக்கிடலாம்,

என்னும் பாடல் காதல் தத்துவத்தை மிக எளிமையாக விளக்குகின்றது. 'மனமிருந்தால் மலையும் சாயும்' என்பது பழமொழி. 'நத்தி வரும் மச்சானுக்கு முத்துச்சரம் நான் ஆவேன்' என்று மாமன் மகளை மணந்து கொள்ளப் பேராவலுடன் காத்துக் கொண்டிருக்கும் தலைவி பாடுகின்ற போது நாடோடிப் பாடல்களில் காதற்சுவை சொட்டுவதைக காணலாம்.

மஞ்சள் புடைவைக்காரி — குட்டி
மாதுளம்பூக் கூடைக்காரி
மஞ்சள் புடைவையிலே — குட்டி
மருக்கொழுந்து வீசுதடி
கானக் கரிசலிலே
களையெடுக்கும் பெண்மயிலே
நீலக் கருங்குயிலே
நிற்கட்டுமா போகட்டுமா?

என்று நாட்டுப்புறத் தலைமகன் தலைமகளை நோக்கிக் காதல் ஏக்கத்துடன் பாடும்போது அப்பாட்டிலுள்ள காதற் சுவையை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. மற்றொரு நாட்டுப் புறத் தலைவன் தன் ஆருயிர் காதலியை அன்புடன் விளித்துக் காதல் மொழி பேசுகின்றான். இதோ அக்காதல் மொழி. —

கண்டாலே போதுமடி — என் சின்ன தங்கம்
கரும மெல்லாம் தொலைஞ்சு போகும்
கட்டாணி முத்தோ — நீ
கற்கண்டோ சர்க்கரையோ தொட்டாலே
போதுமடி — சின்னத்தங்கம் என்
தொந்திரவு நீங்குமடி.

வேறொரு நாட்டுப்புறத் தலைவன் தன் காதலியை முழு மனத்துடன் காதலிக்கிறான். அவளைத் தவிர வேறு பெண்ணை மணந்து கொள்ள அவனுக்கு மனமில்லை. அவனுடைய காதல் அகங்கனிந்த காதல், உண்மையான காதல், தூய்மையான காதல், உறுதியான காதல், உயிரினும் உயர்ந்த காதல், சாகாத காதல், இப்பிறப்பில் அவளை மணக்க முடியாவிட்டாலும் மறு பிறவியிலாவது எப்படியாவது அவளை அடைந்தே தீர வேண்டும் என்னும் உள உறுதியுடன் பொருந்திய நல்ல காதல் அத்தகைய காதல் அவன் காதல். அவன் காதல் நெஞ்சத்தில் தோன்றிய காதல் மொழியை இங்கே பாருங்கள்.

நான் செத்து மடிந்தாலும் செலவழிந்து போனாலும்
செத்த இடந்தனிலே செங்கழுநீர்ப்பூ பூப்பேன்
மாண்டு மடிந்தாலும் வைகுந்தஞ் சேர்ந்தாலும்
மாண்ட இடந்தனிலே மல்லிகைப்பூ பூப்பேன்
பஞ்சணை மெத்தையிலே படுக்கைமலர் ஆவேன்யான்.

கொண்டைக்குப் பூவாவேன் கொசகத்திற் பையாவேன்
நெற்றிக்குப் பொட்டாவேன் நீல விழி மையாவேன்
முன்றானைத தொங்கலிலே முள்ளாகி ஓட்டுவேன்யான்
காலுக்கு மெட்டாவேன் கைவளையல் தானாவேன்.

(தொடரும்)

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

கம்பரின் நகைச்சுவை

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

சூர்ப்பணகை 'நாண் இலள்', 'நொய்யள்' 'நல்லாளும் அல்லள்' என்பதை உணர்ந்து கொண்ட இராமர் தான் திருமணமானவர் எனுது அழகிலா அரக்கியை 'சுந்தரீ!' என நகைச்சுவை பட விளித்து

'சுந்தரீ!' மரபிற் கொத்த தொன்மையின்
துணிவிற்றன்ருல்
அந்தணர் பாவை நீ, யான் அரசரில் வந்தேன்!

என்ருரெனக் கம்பர் மொழிந்துள்ளார். ஈண்டு, 'அந்தணர் பாவை நீ, யான் அரசரில் வந்தேன்' என்றதில் இராமருக்கு அவளை மணந்து கொள்ள விருப்பமிருந்தும் குலம் குறுக்கே தடையாக நிற்பதாக இராமர் கூறுவதிலிருந்து, அமைதியாய நகைக் குறும்பு சூதாகத் ததும்பி வெளியாதல் கண்டு நகுதற் பாலது சூர்ப்பணகையின் பேச்சிலும் செயலிலும் மாயப்பொய்யும் வஞ்சனையும் காமமும் வரன்முறையிலாது நீடித்தால், நகைச்சுவை பாழ்படுமெனக் கருதிய கம்பர், தன் காவியச் சிற்பக்கலை வன்மையால் அச்சூழ் நிலையினை மாறும்படி சீதையை தெய்வப் பொலிவுடன் சூர்ப்பணகை முன்தோன்றும்படி செய்து நகைச் சுவையினையும் மேலும் பொலிய வைத்தார். அதுபோது சூர்ப்பணகை இராமரை நோக்கி

வருமிவள்மாயம் வல்லள் வஞ்சனை அரக்கி நெஞ்சம்
தெரிவிலள் தேறும் தன்மை சீரியோய் செயலிற்றன்ருல்
உருவிது மெய்யதன்ருல் ஊன்நுகர் வாழ்க்கையாளை
வெருவினன் எய்திடாமல் விலக்குதிவீர!

என்ற கம்பர் கூற்று நம்மையறியாமலே நகையும் உவகையும் பீறிட்டுப் பிறங்குதலைச் செய்கின்றது. வஞ்சனையிலும் மாயத்திலும் வல்லாளாகிய சூர்ப்பணகை சீதையை அரக்கியென்று கூறும்போது 'எங்கப்பன் குதிருக்குளில்லை' என்றது போன்ற நகையின் செவ்வி சுவையுடன் வெளி ததும்பவது பெறப்படும். மற்றும் இத்தகைய நகைக் குறிப்பு சூர்ப்பணகை இயல்பில்

மாயமும் வஞ்சனையும் அரக்கி நெஞ்சமும் மிதமிஞ்சிய காமவெறியும் நிறைந்துள்ளதைக் காட்டி, அவள் பால் நமது இரக்கவுணர்வையும் சுரக்க வைத்து விடுகிறது. வெறுப்பாகவும் அருவருப்பாகவுமுள்ள சூர்ப்பணகையின் காதலுணர்ச்சி நிலையினை, நகைச்சுவைத் தன்மையால் கம்பர் கலை மணங் கமழ மிளிரும்படிச் செய்து விடுகிறார்.

கம்பர் நகைச்சுவை மூலம் கதையின் வளர்ச்சிக்காக, பொருந்தாத சூர்ப்பணகையின் காதல் உருவக உணர்ச்சியைக் கண்ணீரிலும், கதறிப் புலம்புலிலும் மடைதிறந்து பொங்கியெழுவதைக் காட்டி, அவளது அரக்கிமன நிலையை

கலை உவாமதியே கறியாக வன்
சிலையின் மாரனைத் தின்னும் நினைப்பினள்

எனக் கம்பர் புலப்படுத்தி அவளது சொல்லிலும் செயலிலும் நிலவும் விரகத்தை நகைபடக் காட்டிவிடுகிறார் காமத்து விலங்குணர்ச்சியிலும் இச்சையிலும் ஈடுபட்ட சூர்ப்பணகை தன்னை ஏற்றுக்கொள்ளாத இராமரிடத்தே, இலக்குவன் பாலுள்ள நயப்பால் 'இளங்கோவோடு எனை இருத்தி' என்று கேட்டுக் கொண்டதில். தன்னைத்தானே இகழச் செய்யும் காமத்து இயற்கை, குரோதமாக மாறுவதைக் கம்பர் தெளிய வைத்த வகை புன்னகை கொண்டு நகுதற்பாலது வீரியத்தினவு வாய்ந்துள்ள மனத்திற்கு, தன்னல மிக்குடைய காதல் வளர்க்கும் நினைப்பின் இயல்பினைக் காவியத்தில் சுவைபடக் கூறின், கவர்ச்சி மிகுதலியல்பு ஆனால் பழகு தமிழில் கம்பர் அழகுற சொற்பொருளோடு கூட்டியமைத்த நகைச்சுவை. சாந்த சக்தி சுழல, அன்னவருக்கு இனிமை தரும் சால்புடைத்து,

இராம கதையின் நீட்சிக்கும் போக்கிற்கும் மெருகு கொடுக்க கம்பர், நகைச் சுவைபட, சூர்ப்பணகை. இராமர் பாலுள்ள காமக் கடப்பு நிறைவேறக்கட்டும் மனக் கோட்டையின் இயல்பினை இராவணனிடம் செய்யும் முறையீட்டில் காட்டி, அவளது அரக்கப் பெண்மையின் காமவேகத்தில் விம்மித் தவழும் கவிதை வழி சீதையின் பேரழகில் இராவணனது காமத்தினையும் கிளறி ஈடுபட விடும் வகை நககவே தகும்.

மஞ்சு ஒக்கும் அளக ஓதி மழை ஒக்கும் வடித்த கூந்தல்
பஞ்சு ஒக்கும் அடிகள், செய்ய பவளத்தின் விரல்கள், ஐய,
அஞ்சொற்கள் அமுதில். அள்ளிக் கொண்டவள் வதனம்
மைதீர்
கஞ்சத்தின் அளவிற்று எனும் கடலினும் பெரிய கண்கள்'

என சீதையின் அழகிலே இராவணனை ஈடுபடச் செய்த சூர்ப் பணகையின் மனக் குமுறலில், உள்ளக் களிப்பினை விதவிதமாக விளையாட வைத்து, அவளது போக்கு தகுதியற்றதாக, அவ ளது சொற்கள் மூலம் கம்பர் காணவைத்து, அவளையும் பொருட் படுத்தாது விடுவது உவகை விளைவிப்பதாகும். பூமாண் குழலாளாய சீதையைக் கவர்ந்து கொள்ளும் எண்ணத்தை இராவணனது மனத்தின்கண் விதைத்த சூர்ப்பணகை

'மீன் கொண்டூடாடும் வேலை மேகலை உலகம் ஏத்த
தேன் கொண்டூடாடும் கூந்தல் சிற்றிடைச் சீதை என்றும்
மான் கொண்டூடாடு, நீ உன் வாள்வலி உலகம் ஏத்த
யான் கொண்டூடாடும் வண்ணம் இராமனைத்தருதி என்பால்'

எனத் தன் தமையனைக் கேட்டு, தனக்கு நேர்ந்த அங்கபங்கத்தை பின்னர் நினைந்து,

...... முடிந்ததென் வாழ்வும் உன்னின்
சொன்னபின் உயிரை நீப்பான் துணிந்தனென்'

என அவள் கூறுவதால் பெறப்படும். முன்பின் முரணாக அமையும் அவளது காதலும் பொறுமைப் புயலும் கலந்த அற்புத நடிப் பைக் காண வைத்தது நகுதற்குரியது. மற்றும், கோள், பொய், செருக்கு, பொறுமை, வஞ்சம் சூதெல்லாம் நிறைந்த அரக்க மாதின் காதல் விருப்பம் இராமருக்குப் பகையாக வந்துற்றதை நகைமுகமாக கம்பர் விளக்கியதும் காண்க.

சீதையின் வடிவழகினைப் பற்றி, சூர்ப்பணகை பேசிய வார்த்தைகளைக் கேட்டு காமப் பித்து தலைக்கேறி வெறிகொண்ட இராவணன் புலம்புவதும், தங்கையை அழைத்து 'கருமையும் கூர்மையுங் கொண்டு ஒளியுடன் கூடிய கண்களோடு மயில் போல் என்முன் தோன்றுபவள் நீ கூறும் சீதையா? எனக் கேட்டு மயங்கி மறுகுவதையும், அதற்கு அவள், ஆமெனக் கூறி இராமரது பேரியலையும் உருவெளித் தோற்றத்தினையும்

'செந்தாமரைக்கண் ணொடும் செங்கனி வாயினொடும்
சந்தார் தடம்தோளொடும் தாழ்தடக் கைகளோடும்
அந்தார் அகலத்தொடும் அஞ்சனக் குன்றம் என்ன
வந்தான் இவனாகும் அவ்வல்வில் இராமன்'

என உணர்ச்சி பொங்க செப்பி மனவேசறவு அடைதலையும், கம்பர் அன்னவர்களது மனநிலைகளைச் சிதறவிடாது உருவகப்

படுத்திக் காட்டுவது நகைபடு அற்புதப் புலமைச் சிற்பங்களா கும். மற்றும் கொடுமை நெஞ்சினளாகிய சூர்ப்பணகை சீதை யைப் பற்றியும், இராமரைப் பற்றியும் சிறப்பாகக் கூறுங்காலை, தன்னையே வென்று, பின் தமையனையும் வென்று அரக்கர் குலத்தை, வில்லைத் துணைகொண்டு அழிக்கப்புகும் இராமரை யும் அவனது மனக் கண்ணில் பதியவைத்து, அவன் மனதிலே பொல்லாத காமத் தீயையை மூட்டிய தீமையினைப்பற்றி தூய்மை முறையில், கம்பர், தம் பேரறிவால் சுவைபட புதுமையாகக் கையாண்டு வெற்றி கண்டது நகை பயப்பதாகும்.

இராம காப்பியத்தின் கட்டுக் கோப்புக்குள்ளே, கம்பரது வாலிவதைப் படலம், துன்பியல் நாடகக் கலையில், செகப்பிரியர் போன்ற வல்லார் யாவரையும் விஞ்சும் வகையில், கம்பர் மாட் சிமை யெய்தி விளங்குதற்குச் சான்று பகரும். வாலி வதையில் கம்பர், துன்பக் காட்சியியலின் வெம்மையை அகற்ற, துன்பத் தில் நகையின்பக் கண்ணீர் வார்க்கும் கலையினை வற்றாத ஊற் றாக வளம் படுத்தியுள்ளார்: மற்றும் துன்பத்தை ஓசை ஒலியினு லேயும், கவிதைக் கலையாலும் நகைச்சுவை வழி இன்பமாக மாற்றி, துன்பத்தினிலே அமைதியினையும் காண வைத்துள்ளார்.

கம்பர் வாலிவதைப் படலத்தில், கொல்லம்பு தொடுத்த இராமர் மீது, நகையுணர்ச்சியில் தோய்ந்த சொல்லம்பு விடுத்த வாலியின் சான்றாண்மைக் காட்சியினைக் காட்டி, சமய சந்தர்ப்ப தகுதியாலெழுந்து இராமரது தவறுகளால் விளைந்த துன்பி யலை நினைவூட்டும் வகையில் நகையுணர்வை, துலாம்பரமாக அமைத்து இருவரது குணச் சிறப்பிலும் தூய்மை படரும்படி செய்து விடுகிறார். தன்னை மறை முகமாயிருந்து வாளி வீசிய வன் இராமரென்று வாலி தெரிந்தவுடன், அவ்வாளி எய்தவர் பால் மீண்டேகும் தனித்திறம் பெறாதவாறு அதனை வீரமுடன் தன் மார்பிலிருந்து வாலி பறித்தெடுத்து, யாது செய்தானென் பதைக் கம்பர் கூற்றால் அறிகுவம்.

· இல்லறம் துறந்த நம்பி, எம்மனோர்க்காகத் தங்கள்
வில்லறம் துறந்த வீரன் தோன்றலால், வேத நன்னூல்
சொல்லறம் துறந்திலாத சூரியன் மரபும், தொல்லை
நல்லறம் துறந்தது என்னு நகைவர நாண் உட்கொண்டான்

மலர்ந்த முகத்துடன் இராமர், காட்சி தரும் கொடுமையை சினமேகம் கவர்ந்த முகத்தோடு கண்ட வாலி, உள்ளத்தில், வீரத்தின் கண்ணெழுந்த வெகுளி ஆங்காரமாய்ப் பொங்க,

உள்ளம் உடைந்து, எள்ளல் கொப்புளிக்க இகழ்ந்து 'எண்ணுற்றாய்! என் செய்தாய்! கருணை வள்ளால்! என வகை ஏற்படாதவாறு நகையொடு கூடிய பரிபவமும் பரிதாபமும் புலப்பட விளிப்பானாயினான். இராமர் செய்த சூழ்நிலை சந்தர்ப்பு தவறுதலை நன்குணர்ந்த கம்பர், தக்க அளவாக நகைச்சுவை ததும்புமாறு எள்ளல் வகையால் எடுத்தியம்பி அந்நிலையில் எள்ளளவு விலகின் அது தாங்க இயலாத துக்கத்தின் கண்ணீர்க் கடலாக மாறிவிடும் என ஓர்ந்து, இன்பத்தில் கண்ணீர் வார்க்கப் புயிலச்செய்து, இன்பக் கண்ணீரில் தூய்மையினை அடையும் வகையினை நகைபடத் தெளியவைத்தார்.

கம்பர் தான் கையாளும் நகைச்சுவையின் திறனால், கனல் கக்க வேண்டிய வாலியின் சீற்றத்தை மாற்றி, வாலியின் பேராற்றலையும், நுண்மதியினையும் பகையாத பண்பினையும், இராமரது திகைக்கும் சிந்தையையும், வாலியின் வரபலத்தை அழிக்கும் திறனையும் விறல் சார்ந்த சமுதாய அறப் பணியினியல்பினையும் வயங்க வைத்து வாலியின் வதைக்கு ஊழ் உதவிய அமைதியினைக் கண்டார்: மற்றும் புகை பாராட்டும் பண்பினை நகையின் மூலம் தூய அன்பாக மாற்றி வைத்தார். ஆறித்தணியாத வாலியின் சினம்,

கோவியல் தருமம் உங்கள்
குலத் துதித்தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணா
உருவத்தாய் உடைமைத் தன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தின் அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்பு
திகைத்தனை போலும் செய்கை

எனவும்

தாரம் மற்றொருவன் கொளத் தன்கையில்
பார வெஞ்சிலை வீரம் பழுதுற
நேரும் அன்று மறைந்து நிராயுதன்
மார்பின் எய்யவோ, வில்இகல் வல்லதே!

எனவும்,

செருக் களத்து எதிர்த்து எய்யாதே
வெவ்விய புளினர் என்ன
விலங்கியே மறைந்து வில்லால்
எவ்விய தென்னை?

என இவ்வாறு நகைச்சுவையாக கிளம்பிற்று. இதன்கண். தாரம் மற்றொருவன் கொள நிற்கும் இராமரது ஒழுக்க நேர்மையினையும் அவரது வில்லின் ஒழுக்க நெறியினையும், நாணம் ஏற்படும்படி ஏளனஞ் செய்து, அவ்வொழுக்கங்களைப் பறி கொடுத்து விட்டதைக் குத்தலாகக் காட்டி 'உன்னைப்போன்ற மேனி அழகன் உண்டா? அறவேலியை அழிக்கும் விறலும் வீரமும் என்னே !' என்றது. பொறுக்க இயலாத உயிர் வேதனையில் விரிந்தெழும் தூய உள்ளத் துணர்வின் உவகையே, இகழ்ச்சியோடு கூடிய நகைச் சுவையின் வான் முகடாய் விளங்குவது காண்க.

போர் வாலி வலிய கரத்தால், தம் மார்பில் புகுந்த வாளியைத் தடுத்து 'இச் சரம் விடுத்தவன் யார் கொல்?' என அயிர்த்து, மனம் நெகிழ மார்பகத்திலிருந்து பறித்த வாளியில் பொறித்த 'இராமர்' என்ற செம்மை சேர் நாமத்தைப் பார்த்து குறுநகை புரிந்து நாணுடைமையால் வியந்தபோழ்து. நகுதற் கேற்ற நிலையில் 'கொற்ற வெங்கொடு மறலியும் சிர தலம் குலைந் தான்' என்றார் கம்பர். இத்தகைய சூழ்நிலையில் கம்பர் சுக்கிரீவன் பாலுள்ள உடன்பிறப்பென்ற உரிமைப் பாசம் நெடும் பகை பாராட்டும் பண்பினை யொழித்து அன்பெனும் ஆழியில் உயிர்ப்புடன் மறுமலர்ச்சி யெய்தியதை நகைபட புலப்படுத்தும் மாண்பு சீரியது.

'வாசத்தாரவன் மார்பு எனும் மலை வழங்கு அருவி
ஓசைச் சோரியை நோக்கினன்: உடன் பிறப்பென்னும்
பாசத்தால் பிணிப்புண்ட அத்தம்பியும், பசுங்கண்
நேசத்தாரைகள் சொரிதர, நெடுநிலம் சேர்ந்தான்'

வாலியின் வீரம் செறிந்த செயலில் சுக்கிரீவனது உடன் பிறப் பென்னும் பாசம் படர்ந்த அதிசயக் குறிப்பினை, அறிந்து பயில் வோர் மகிழச்சியுறும் வண்ணம் பொருண்மை தோன்ற கம்பர் எடுத்துக் காட்டும் இலக்கிய வகை, முறுவல் நகை வியப்புக் குரியது.

சிறைபடுத்தப்பட்ட சீதையை விட்டுவிடும்படியாக, இராவணனிடம் நயந்து வேண்டி. விபீடணன் கூறிய நன்னெறிகள் யாவும் அடக்கமாய நகைப் பேச்சில் ஆணித்தரமாய் தெறித்து வீழ, அவை இராவணனது வீரம், வெகுளி முதலாய பண்புகளை. அவனது ஆணவ வெறிச் செருக்காலே குழம்பச் செய்து

(253-ஆம் பக்கம் பார்க்க)

கம்பன் கண்ட சமதர்மம்

திரு. மது. ச, விமலானந்தம், எம். ஏ.,
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை - 5.

சமதர்மம் என்பது தனியொரு கோட்பாடன்று; அஃதொரு கூட்டுக் கோட்பாடாகும். அதன்படி, மக்கள் தங்கள் தான்மையையும் ஆளுமையையும் வளர்த்து நிறை நிலை எய்தவும், தங்களால் ஆன பங்கையும் பணியையும் சமுதாயத்திற்குச் செய்யவும் கூடிய வகையில், ஒவ்வொருவருக்கும் குறைந்த அளவிலேனும் சமுதாய, பொருளாதார. பண்பாட்டு வசதிகள் அளிக்கப் பெறல் வேண்டும்.[1]

சமதர்மக் கொள்கையின் தந்தையாம் கார்ல் மார்க்ஸ், சமதர்மத்தின் அடிப்படையினை, 'திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற உறுபயன்'[2] என வரையறுக்கின்றார். பிறப்பால் எல்லோரும் சமம். ஆண்டவன் முன் அத்துணைபேரும் நிகர்; ஆகலின் எல்லோரும் ஏற்றத் தாழ்வின்றி வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளாம் உணவு. உடை, உறையுள். தேவைக்கும்

---

1. ('Socialism is not a single concept but a synthetic concept under which a minimum social, economic, cultural facilities must be given to each and every one so as to enable one's personality grow to its maximum stature and to contribute his might to society')

2. 'From each. according to his abilities
To each, according to his needs'

3. 'Eqnality is a basic concept where all human beings are presumed to be equal by birth in the eyes of God. Under law, no manis discriminated on the basis of religion, caste. brith, race, Education, language. creed. colour, culture & even sex.'

குறிப்பு: சென்னை வானொலி நிலையத்தில் 30—7—71 நிகழ்த்திய பேச்சு, நிலைய அனுமதியோடு வெளியிடப் பெறுகிறது.

திறத்துக்கும் ஏற்பப் பெறல் வேண்டும். பிறவாழ்வின் மகிழ்நிலைகளும் அனைவர்க்கும் ஒன்றாகவே அமையவேண்டும். சமவாய்ப்பு, சமவளதி, சமஉரிமை, இருத்தல்வேண்டும். யாரும் எக்காரணம் கொண்டும். சமயம், சாதி, பிறப்பு. இனம், கல்வி, மொழி, பண்பாடு, பால் பாகுபாடு போன்றவற்றால் வேறுபடுத்தப் படக்கூடாது. 3

சென்ற நூற்றாண்டிலும் சிறப்பாக இந்த நூற்றாண்டிலும் தான் இச்சமதர்மக் கொள்கை மிகவும் பேசப் பெறுகிறது; அதிலும் இத்தொடர் அரசியல் உலகில் அடிபடும் தொடராகும். இக் கோட்பாடு நந்தமிழ்க் கவிதையில் எங்ஙனம் இடம் பெற்றுளது; நம் செந்தமிழ்க் கவிஞர்கள் சமத்துவத்தை எங்ஙனமெல்லாம் எடுத்தியம்பியுள்ளனர் என்று காண்பதில் ஓர் இன்பம் உளது. சொற்றொடர் என்னவோ இன்று தோன்றியதாயினும், இச் சமதர்ம வுணர்வு அன்றும் இருக்கவே செய்தது. அதுபற்றி அருந்தமிழ்க் கவிஞர்கள் யாது கருதினர். அதனை

(251-ஆம் பக்கம் தொடர்ச்சி)
உவகைபட அலைமோத விடுகின்றன மேலும் அவை அவன் நடுங்குதல் காரணமாக, கேலியுங் கிண்டலுங் கொண்டு, இராவணனது சினத் தீப்பொறி பறக்குமாறு, புகையினைச் சிதறி விளையாட விட்டு, அதனிலே நகைபட உயர்வு தாழ்வு தன்மைகளைச் சித்தரித்துக் காட்டுகின்றன. இராவணனது வீரத்தின் கண்ணெழுந்த வெகுளி, எத்தகையவாறு நகைக்கத்தக்க எள்ளலாக மாறி, அவனது அறிவினை நீக்கி, அழிவினை யெய்தும் சிறுமையை அளித்ததென்பதும் எள்ளல் இகழத்தக்க குறுநகையாக மாறி விளங்கியதும்

'வெஞ் சினந்தருபோரி னெம்முடனெழ வேண்டா
இஞ்சி மாநகரிடமுடைத் தீண்டினி திருத்தி
அஞ்சலஞ் சலென்றருகிருந்தவர் முகநோக்கி
நஞ்சின் வெய்யவன் கையெறிந்துருமென நக்கான்'

என்ற இராவணனது கூற்றால் ஒருவாறு தெளியப்படும்.

கூர்ந்து சிந்திக்கின், ஆற்றல் நிறை கல்வியமைதி அறிவு முதலியவற்றால் இழைந்து கிடக்கும் நகைச் சுவையினை, காவியத்தில் வியக்கத்தக்க வகையில், பயனுறும் சிறப்பியல்போடு பரப்பிய பெருமை, இராம தூதராகிய அனுமான் ஒருவருக்கே உரியதாகும்.

(தொடரும்)

எப்படித் தம் கவிதைகளினூடே இழையோடச் செய்துள்ளனர் என்றறிவது இன்றியமையாததும் பயனுள்ளதுமாகும். இதனால், இன்று கருதப்பெறுமாறே சமதர்மம் இவர்கள் படைப்பில் இடம் பெற்றுளது என்று பொருளில்லை; தமிழ் இலக்கியத்தில் சித்தரிக்கபபெறும் மனித உணர்வு, சமுதாய நீதி போன்றன கொண்ட சமுதாய அமைப்பும் வாழ்வியல் முறையும், உண்மையிலேயே இன்று நாம் கருதும் சமதர்மத்தினைக் கோடிகாட்டும் வரைப்படமாக விளங்குகிறது எனலாம்.

ஏனெனில் சமுதாயத்தின் முன்னணியில் நிற்கும் பாராளுமன்றப் பெருமக்கள் நம்மால் தெரிந்தெடுக்கப்பெற்ற சட்டமியற்றுநர்கள்; மண்ணுக்குமேல் தெரியும் மரம் போன்றவர்கள். ஆனால் மண்ணுக்கடியில் கண்ணுக்குத் தெரியாது அமையும் வேர் போல, சமுதாயத்தின் பின்னணியில் இருந்து, சிறந்தன செய்யும் சட்டச் சான்றோர்களாக அமைவர்கள் புலவர்கள் என்றுணர வேண்டும். 4

இப்பின்னணியை இதயத்தில் கொண்டு கல்வியிற் பெரியன் கம்பன், தன் காப்பியத்தின் வாயிலாக இச் சமதர்மத்தை காட்டுமாறு யாங்ஙனம் என்பது காண்போம்.

கம்பன்தான் படைத்த காவிரி நாடன்ன கழனி நாடாம் கோசல நாட்டினைச் சித்திரிக்கும்போது சமதர்மச் சால்பினைத் தெளிவுபடுத்தி விடுகின்றான். கோசல நாட்டு மக்கள் உழைப்பின் உயர்வு அறிந்தவர்களாம்; உழுது உண்டு வாழ்கின்றவராம். உழைப்பினை யுணர்த்தும் உழவே, அங்கு ஓங்கி நின்றதாம்.

பால் முறையிலுங்கூட சமத்துவம் நிலவியதாம் அங்கு, அதனால் பெண்களும் பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் பெற்றனராம். பெற்ற பெருஞ் செல்வத்தை வருந்தி வந்தோர்க்கு விருந்து வைத்தும் வாரி வழங்கியும் இன்புற்றனராம்.

பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க் கீதலும், வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே!

4. Poets are the unacknowledged legislators of the world i. e. the Poets are the real rulers of the world.

என்கிறான். கல்வியிற் பொதுமை கனிந்து நின்றமையால், கற்றுத்துறை போயவர் என யாரையும் குறிப்பிட்டுக் கூற இயலாதிருந்தது.

கல்லாது நிற்பார் பிறரின்மை யின்கல்வி முற்ற
வல்லாரு மில்லை; அவைவல்ல ரல்லாரு மில்லை
ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்.

என்றுரைக்கின்றான் கம்பன், அன்பு, அறிவு, அறம், பொருள் எனச் செல்வங்கள் எத்தனையுண்டோ அத்துணையும் அனைவரும் குறைவறப் பெற்றுள்ளனராம். இதனால் அங்கு ஏழை பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வே இல்லையாம்.

எல்லாரும் எல்லாம்பெருஞ் செல்வமும் எய்த லாலே,
இல்லாரும் இல்லை உடை யார்களும் இல்லை மாதோ.

ஆக, அயோத்தியில் அறிவுச் செல்வம் மட்டுமன்று பொருட் செல்வமும் பொதுவுடைமை ஆகியுள்ள புதுமையினைக் காண்கிறோம். இவற்றில் சமத்துவம் அமைந்து விடில் வேறு எதில் சமத்துவம் அமையாது?

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே. பிறர் பொருள் வவ்வும் புன்மை இல்லை; அதனால் காவல் முறைக்குத் தேவையும் இல்லை. பொருள் நிறைவு பெற்றமையால் இரந்திடும் இழிநிலை இல்லை; எனவே இரப்போர் ஈவோர் என்ற பிரிவுக்கே வழியில்லையாம்.

கள்வார் இலாமைப் பொருட்காவலு மில்லை; யாதுவம்
கொள்வார் இலாமை கொடுப்பார்களு மில்லை மாதோ.

இங்ஙனம் வறுமை என்று ஒன்று இன்மையால், வள்ளண்மை என்றால் என்னவென்றே எவருமறியாராம். பசியிருந்தாலன்றோ பகை யுண்டாக; பகையில்லை யெனில் போரில்லை; போரின்றேல் வீரம் எப்படி விளங்கும்? அது போன்றே மக்கள் யாரும் பொய் பேசியறியார் - அவசியமும் இல்லை; அதனால் உண்மை என ஒன்று அங்கு உருப்பெறவில்லையாம்

வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை,நேர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை,பொய் உரை இலாமையால்;

அனைவரும் அனைத்துச் செல்வமும் துய்த்து மகிழ்ந்து வாழும் போது, குற்றம் நிகழத் தேவை ஏது? குறை நேர வாய்ப்பேது? இல்லாமை யன்றோ பொல்லாமை புரிய வைக்கும்! அத்துணை

பேரும் சிந்தை மகிழ்ந்து வாழ்வதால், சீற்றமுற ஏது இல்லை. அறம்தவழ் ஆன்ற அமைதி வாழ்வு வாழ்வதால். அயோத்தியில் ஏற்றமுண்டே தவிர இழிவு இம்மியும் இல்லையாம்.

கூற்றம் இல்லை,ஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லை,தம் சிந்தையின் செம்மையால்;
ஆற்ற நல்லறம் அல்லது இல்லாமையால்
ஏற்ற மல்லது இழிதகவு இல்லையே.

இங்கே ஒன்று எண்ணுதல் நன்று. கார்ல் மார்க்சு போன்ருர் பொருள் ஒன்றையே மையமாக வைத்துச் சமதர்மம் சாற்றினர்: ஆனல் கம்பரோ, ஒரு படி மேலே சென்று, அறிவுச் சமத்துவமும் அறச் சமத்துவமும் ஆன்ற நாட்டின் அடிப்படைகள் என்றுணர்த்தி, புறத்தாலும் அகத்தாலும் ஒன்றிய சமதர்ம நாட்டினைத் தீட்டிக் காட்டுகின்ருர். காட்டுவதோடு அமையாது,

இத்தகு புண்ணிய போக பூமியை உருவாக்க உருப்படியான வழியையும் உணர்த்திச் செல்கிருர். அதுதான் கல்வி - அனைவர்க்கும் கல்வி. கல்வியாம் வித்தினை ஊன்றிவிடுவோமாயின், அது முளைத்து வளர்ந்து மரமாகும்: மரம், கேள்வி ஞானம் எனும் கிளைகளை நாற்றிசையும் பரப்பும்; அக்கிளைகளில் நன் முயற்சி எனும் தளிர்கள் துளிர்க்கும்; அன்பு எனும் அரும்புகள் தோன்றும்; அன்பரும்பு அறப்பூவாய் மலரும்: அறமலர் இன்பமெனும் கனியைக் கொடுக்கும். இதனைக் கம்பன்,

ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்து. எண்ணில் கேள்வி
ஆக முதல்திண் பணைபோக்கி, அருந்த வத்தின்
சாகம் தழைத்து, அன்பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலும் அன்றே.

என்ருேதுகின்ருன். ஒரு நாடு நலமும் வளமும் அடைய - பொதுமையும் சமத்துவமும் எய்த அடிப்படை கல்வியே, அதனை எல்லோரும் பெற்று உயர்வரேல், எல்லா இன்பமும் எளிதே வந்தெய்திவிடும்.

ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகட்கு முன்னம் கம்பன் கண்ட சமதர்ம வாழ்வு, இன்று எல்லோராலும் எதிர்பார்க்கப் படுகிறது. இந்த நூற்ருண்டில் அண்ணல் காந்தி முயன்ற சர்வோதய நாட்டினைக் கம்பர் கோடிட்டுக் காட்டியுள்ளமை கண்டு வியக்கிருேம். அனைவர்க்கும் கல்வி; அத்துணைபேர்க்கும் பொருளாதார வளதி; எல்லோரும் சமம் என்ற எண்ணம்-இம்மூன்றும்

முழுமையான சமதர்ம வாழ்வினை மலர்ந்திடச் செய்யும். அந்நாட்டில்தான் அன்பு நிலவும் இன்பம் உலவும்; அமைதி தவழும், அறம் திகழும்.

சமதர்மம் என்பதற்கு ஒத்த தன்மை, தோழமைப் பண்பு, ஒருமையுணர்வு என்றும் பொருள் கூறலாம்; உயர்வற உயர்ந்த பெரியோர் மிகத் தாழ்ந்த மக்களோடும் ஒரு நிகராகக் கலந்து மகிழ்ந்து வாழும் தன்மை என விளக்கம் கொள்ளலாம். இதனை, இராமன், குகன் சுக்கிரீவன், வீடணன் போன்ருருடன் கலந்து மகிழ்ந்து பழகிய பான்மையும்: அவர்களை உடன்பிறந்தோராக உன்னி ஒழுகிய உயர்வும் கொண்டு உணரலாம்.

அவதாரம் என்ருலே, மேல் நிலையில் உள்ளான் ஒரு தலைவன் வினைவயத்தால் அன்றித் தன் விழைவால் இழிந்த நிலையில் உள்ளாரொடு ஒத்த தன்மையாய்த் தோன்றுதல் எனப் பெரியோர் பொருள் கூறுவர். இதனுலேயே இராமரை 'அவதார புருஷனு'க் கூறுவது மரபு. இப்படி ஒத்த தன்மையொடு பழகுவதால். மனிதத் தன்மை நிறைவடையும். இதனுற்ருன் இராமாவதாரத்தைப் 'பூர்ணவதாரம்' என்பர். இதுபற்றியே கம்பர் தாம் இயற்றிய இராமகாதைக்கு 'இராமாவதாரம்' என்று பெயரிட்டார்.

தோழமை தர்மம் சமதர்மக் கோசல மண்ணுக்கு இயல்பாக வாய்ந்த ஒன்று. எனவேதான் மனைவியுடனும் தம்பியோடும் சென்ற இராமனுக்குச் சென்ற இடமெல்லாம் தோழர்கள் வாய்க்கின்றனர். கம்பன் தன் காப்பியத்தில் காண்டங்கள் தோறும் சமதர்மத்தை இராமன் மேற்கொண்டொழுகிய மாண்பினை சித்திரித்துச் செல்கிருன். குறிப்பாக குகனும் இராமனும், சுக்கிரீவனும் இராமனும், வீடணனும் இராமனும் சந்திக்கும் இடங்களில் தோழமையுணர்வு நிரம்பி வழிவதை நன்குணரலாம்.

கங்கைக் கரையில் வேட்டுவ குகனைக் காண்கிருன். அத்தூயனை இதய நண்பனுக இற்கிருன்.

'முன்பு உளேம் ஒரு நால்வேம்
இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானேம்'

என்கிருன். அத்தோடு அமையாது, 'ஆழநீர் கங்கை அம்பி கடாவிய ஏழை வேடனுக்கு, எம்பி உன் தம்பி, நீ தோழன், மங்கை கொழுந்தி' என்றுறவு கூறுகின்ருன், இந்தத் தெய்வீகத் தோழமை நினைந்தே குகன், 'தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்ருே? என்று வந்து உருகுகின்ருன்.

இராமன் மட்டுமல்ல, அனைவருமே அன்புரிமையும் அருளுறவும் பாராட்டுகின்றனர், குகனுக்கு அன்னையரை, அறிமுகம் செய்கிறான் பரதன்; அப்போது கோசலை குகனை ஆரென வினவ, பரதன்,

இன்றுணைவன் இராகவனுக்கு, இலக்குவற்கும்
இளையவர்க்கும் எனக்கும் மூத்தான்;
குன்றனைய நெடுந்தோட் குகனென்பான். இந்நின்ற
குரிசில் என்றான்.

உடனே கோசலையும்,

நைவீரலீர் மைந்தீர் ! இனித்துயரான் நாடிறந்து காடுநோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் றாமன்றே
விலங்கற்றிண்தோட்
கைவீரக் களிரனைய காளையிவன் தன்னொடுங் கலந்து, நீவிர்
ஐவீரும் ஒருவிராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்தீர்
என்றாள்.

குலம் கருதும் குறுநெறி அறியாக் காகுத்தன், குண நலம் பார்க்கும் பெருநெறியால் வேடனைத் தோழனாகக் கொண்டான்; அதே போன்று குரங்கின சுக்கிரீவனையும் குடும்ப நண்பனாகக் கொள்கிறான்:

'உன்கிளை எனது; என் காதல் சுற்றம் உன்சுற்றம்
நீ என் இன்னுயிர்த் துணைவன்'

என்கிறான். சுவேல மலை உச்சியிலிருந்து உற்று நோக்கிய சுக்கிரீவன், எதிரே இலங்கையில் கோபுர உச்சியில் இராவணன் நிற்பது கண்டு பாய்ந்து சென்றான். அது கண்டு பதறிப்போய் அவனை 'ஒன்றிய உணர்வே ஆய உயிர்த் துணைவன்' எனப் பேசுகிறான் இராமன. அவன் இராவணனோடு மலைந்து மீளாது மாள்வானாகில், தான் வாழேன் என்றும் இயம்புகிறான்,

அது போன்றே அரக்க இன வீடணனோடும் வியத்தகு நேயம் வைக்கிறான் இராமன்; அடைக்கலம் நாடி வந்த வீடணனைத் தம்பியாகக் கொண்டு,

குகனொடும் ஐயவரானோம்; முன்புகுன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்; எம்முழை யன்பின்வந்த
அகனமர் காதல்ஐய! நின்னொடும் எழுவரானோம்;
புகலரும் கானந்தந்து, புதல்வராற் பொலிந்தான் உந்தை.

என உறவு பாராட்டுகின்றான்.

கொடிய வேலாயுதத்தை இராவணன் ஏவியபோது, பட்டான் வீடணன் என இமயவரை கலங்கினர். அதுபோது காற்றினும்கடிது சென்று வேலினைத் தன் மார்பில் ஏற்றான் இலக்குவன். என்னே தோழமைப் பண்பின் திறம்.

இங்ஙனம் வேடன், வானரன், அரக்கன் ஆகியோரிடம் ஆன்மநேய உரிமை பாராட்டினான் இராமன். அம்மூவர்க்கும் ஏற்றம் தரப் பெற்றமையை, வீடணனை, 'குகப் பெருமாள்' என்றும்; வானரனை, 'சுக்கிரீவ மகாராஜர்' எனவும், அரக்கனை 'வீடண ஆழ்வார்' என்றும் வழங்கு வைணவர் மரபும் நன்கு வலியுறுத்தும் இத்தோழமையுணர்வு சமதர்ம சமுதாயத்தின் அச்சாணியாக அமைவது அறிந்தின்புறற்பாலது.

இதுகாறும் கண்டவற்றால், இந்த நூற்றாண்டில் பெரிதும் பேசப்பெறும் சமதர்மம், பொருளியலையே நிலைபெறக் கொண்டதாக இருக்கிறது; அது சம வாய்ப்பு, சம வளதி, சம வுரிமை, ஏற்றத் தாழ்வின்மை, உழைப்பு, தோழமை இவற்றைக் கூறுகளாகக் கொண்டுள்ளது. ஆனால் பம்பு புகழக் கம்பன் காட்டும் சமதர்மம் இதனினும் ஏற்ற முடையதாகவும் இயலுவதாகவும் அமைந்துளது; அங்கு உழைப்பு உயிர் நாடி; அன்பு, அறிவு, அறம், பொருள், இன்பங்களாம் அனைத்துச் செல்வமும் அனைவர்க்கும் பொதுவுடைமை; இவற்றுக்கெல்லாம் ஊற்று நிலை கல்வி; உறவு நிலை தோழமை என்ற கல்வியும், சகோதரத்துவமும், கம்பன் கண்ணோட்டத்தில், சமதர்மத்தின் இரு கண்கள்; கால்கள் அயோத்தி சமதர்ம ஆட்சி மூலம் உடன்பாட்டிலும், இலங்கை ஏகாதிபத்திய ஆட்சி வாயிலாக எதிர் மறையாலும், சமதர்மத்தில் மலர்ந்த சமுதாயமே—நாடே நிலையாய தலையாய உலையாத உயர் நிலை எய்தும்; அங்ஙனம் மலரா நாடு - சமுதாயம் மங்கி மடிந்து போம் என்றுணர்த்துகின்றான் கம்பன்

பல நூற்றாண்டுகட்கு முன்னம் கம்பன் காட்டிய சமதர்ம வாழ்வு — பொதுமை நாடு. அறிவும் உணவும் பெற்ற இற்றைச் சான்றோர் இயம்பும் பொதுடமை—சமதர்மம் போன்றவற்றை. அளவிலும் அருமையிலும் விஞ்சி நிற்கும் விந்தையறிந்து திறம் வியந்து செயல் மறந்து பாராட்டுமாறுளது. கம்பன புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்பது போன்றே, கம்பன் கருத்துப்படி கனிந்த சமதர்மம் காண்போம்! கம்பன் கனவை நனவாக்கி நலம் பெறுவோம்!!

பொழிலன்பர்கள் சுவைக்க.

சாஸ்திரமா நூலா!

1941-இல் தமிழ்க்கலைச் சொல்லாக்க வினைக்குழுவின் உறுப்பினர் இருவர்களிடையே இச்சொற்கள் பற்றிய சொல்லாடல்.—

திரு. அ இராமசாமிக் கவுண்டர், எம். ஏ, எல். டி. முதல்வர் சேலம் கலைக் கல்லூரி. — சாஸ்திரம் என்ற சொல்லைக்காட்டிலும் நூல் என்ற சொல்லே மிகப் பொருத்தமாக உள்ளது.

திரு. S. வையாபுரிப் பிள்ளை. தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் — அரிய விஞ்ஞானக் கருத்துக்களைத் தொகுத்தும் விரித்தும். ஒழுங்குபடுத்திச் சிறந்த வகையில் கூறுவது சாஸ்திரம் எனப்படும். ஆனல் நூல் என்பது ஏதேனும் ஒன்றைப் பற்றி எழுதப்பட்ட ஒரு நூல் வடிவத்தைக் குறிப்பதாகும். ஆதலால் கணித நூல் என்பதைக் காட்டிலும் கணித சாஸ்திரம் என்பதே மிகப் பொருத்தமுடையது.

இ. — தாங்கள் கூறிய இலக்கணத்துக்கு ஆதாரம் உள்ளதோ? நூல் என்ற சொல்லுக்கு தாழ்ந்தபொருளும் சாஸ்திரம் என்ற சொற்கு உயர்ந்தபொருளும் கற்பிக்கப்படுவதின் நோக்கம் யாது?

வை. — ஆதாரம் ஒன்றுமில்லை. உலக வழக்கு

இ. — நூல் என்பதும் சாஸ்திரம் என்பதும் ஒரு பொருள் குறிக்கும் இரு சொற்களாகவே உலகில் வழங்கி வருகின்றன. வியாகரண சாஸ்திரம் என்பதும் இலக்கண நூல் என்பதும் ஒரே பொருளைக் குறிக்கின்றன. மேலும் பல்கலைக் கழக அகராதியில் நூல் என்ற சொல்லுக்கு Systematic treatise, science. சாஸ்திரம் என்று பொருள் குறிக்கப்பட்டுள்ளது.

வை. — பல்கலைக் கழக அகராதியிலுள்ள பொருள் சரியன்று அது விரைவினுல் நேர்ந்த பிழையாகும்.

இ. — தொல்காப்பியத்தில் நூலுக்கு இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது.

ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
யீரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியொடு புணரின்
நூலெனெ மொழிப நுணங்குமொழிப் புலவர்

(262-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு.

(8)

நிதியகங்களில் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்கள் சிலவற்றிற்குத் தூய தமிழ்ச் சொற்கள் இவ்விதழில் வெளியிடப் பெறுகின்றன. இவற்றைப் பொதுமக்கள் பயன்படுத்தி வரவேண்டுகிறோம்.

ஏதேனும் சில சொற்களுக்குத் திருத்தங்கள் ஏற்றதெனக் கருதினால் வழக்கம் போல் அன்பர்கள் அவைகளை எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

Bank (வங்கி)	—	நிதியகம்,
Banker	—	நிதியாளர்
Cheque	—	காசோலை
Crossed cheque	—	வரைகாசோலை
Draft	—	உண்டியல்
Chalan	—	செலுத்துச் சீட்டு
Token	—	அடையாளம்
Invoice	—	விலைப்பட்டி
Deposit	—	வைப்பு
Fixed Deposit	—	குறித்தகால வைப்பு
Recurring Deposit	—	மீளவரும் வைப்பு, தொடர் வைப்பு
Current Deposit	—	நடப்பு வைப்பு
Savings Deposit	—	சேமிப்பு வைப்பு
Pass-Book	—	பற்றுவரவுச் சிட்டை
Current Account	—	நடப்புக் கணக்கு
Savings Account	—	சேமிப்புக் கணக்கு
Loan	—	கடன்
Advance	—	முன் பணம்
Surety Loan	—	ஆள் பொறுப்புக் கடன், இணைப்பொறுப்புக் கடன்
பெந்தகக்கடன் Mortgage	—	அடைமானக் கடன்
Hypothecation	—	ஒற்றி வைத்தல்
Security	—	பிணையம்
Credit	—	பற்று
Creditor	—	பற்றாளர்
Debtor	—	கடனாளர்
Due-Date	—	குறித்த நாள்
Over Due	—	மிகைக்கடன், மிகை எடுப்பு

சாமீன்	—	பொறுப்பு
வில்லங்கம்	—	தொடக்கு
Commission	—	கழிவு, தரகு
Discount	—	தள்ளுபடி
Bonus	—	சிறப்பு ஊதியம்
Bill Book	—	முறிச் சுவடி
Document	—	ஆவணம்
Item	—	இனம்
Accountant	—	கணக்கர்
Cashier	—	காசாளர்
Sanction	—	இசைவாணை
Approval	—	ஒப்புதல், இசைவு
Treasury	—	கருவூலம்
Bill of Exchange	—	உறுதிமுறி
Balance Sheet	—	ஐந்தொகைக் குறிப்பு

(260-ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பது நூலின் இலக்கணமாயிருக்க, தமிழர் மரபுக்கு முரண் பட்ட பொருள் கொள்ளுதல் முறையல்லவே.

வை.—நூலும், சாஸ்திரமும் ஒரு பொருள் குறிப்பனவாயின் சாஸ்திரம் என்ற சொல்லை நீங்கள் ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்?

இ. — சாஸ்திரம் என்பது வட சொல். நூல் என்ற தூய தமிழ்ச் சொல்லிருக்க அதே பொருளையுடைய பிறசொல்லைப் புகுத்துதல் நீதியன்று.

வை. — சாஸ்திரம் என்பதும் தமிழ்ச் சொல்லேயாகும். அது தேவாரம் திருவாசகம் முதலிய சமய நூல்களில் ஆளப் பட்டுள்ளது. தமிழில் இரண்டறக் கலந்த சொல்லெல்லாம் தமிழ்ச் சொல் என்பதே எமது துணிபு.

இ — உங்கள் கொள்கை எனக்கு வியப்பைத் தருகிறது. சாஸ்த்திரம் என்ற சொல் சமய நூல்களில் காணப்படலாம், அதனாலேயே அது தமிழ்ச் சொல்லாகாது. ஒரு சொல் தமிழ்ச் சொல்லா அல்லது ஆரியச் சொல்லா என அறிவதற்குப் பல முறைகளுண்டு. அவற்றுள் ஒன்றினாலாவது உங்கள் கொள் கையை நிலைநாட்ட முடியாது.

வை — அடிப்படையான கொள்கையிலேயே உமக்கும் எமக் கும் கருத்து வேற்றுமையுண்டு ஆதலால், விவாதத்தை நிறுத் திக் கொள்வோம்.

(தமிழ்ப் பொழில் துணர் ௰௬ — 1943)